லும், பற்பல உருவங்களை அந்தப் பரம்பொருளுக்குக் கற்பித்து, அந்தந்த உருவங்களுக்கு இயைந்த உறுப்புக்களையும் அணிபணிகளையும் வகுத்து, உலகிலே வழிபாடு நிலவுவதற்கு எல்லாச் செயல்களையும் நெறிப்படுத்தியவர்கள் ஞானிகளேயாவார்கள்.

தாங்கள் அருவத்திலே பரம்பொருளை வழிபட்டபோதிலும், உலக மாந்தருக்குக் கடுமையான பயிற்சிகளும் நேர்முகமான இரகசிய நெறிமுறைகளும் வழங்குவது இயலாத காரியம் என்பதனால், கூட்டமாக மக்கள் குழுமி இறைவனை வழிபட்டு, அந்தப் பேரின்பப் பெரும் பயனைத் துய்ப்பதற்குரிய வழி, சமதர்ம வழிபாட்டு நெறிதான் என்பதை உணர்ந்த காரணத்தினால், இத்தகைய உருவ வழிபாட்டு முறைகளையும் விரிவாகவே ஞானிகள் உலகுக்கு தந்தார்கள்.

தமிழகத்தின் வரலாற்றை ஆராய்ந்தோமானால், சமணமும் சாக்கியமும் நமது பண்டைச் சமயங்களைக் கீழ் அமுக்கிக் கொண்டு மக்களிடையே பரவத் தொடங்கியதற்குக் காரணம், அவர்களுடைய கூட்டு வழிபாட்டு முறையே ஆகும். நூற்றுக்கணக்கான மாந்தர் ஒருமித்துக் கூடி வழிபடுகிற முறை சமணத்திலும் சாக்கியத்திலும் வேரூன்றி இருந்தது. 'தம்மம் சரணம் கச்சாமி', 'சங்கம் சரணம் கச்சாமி', 'புத்தம் சரணம் கச்சாமி' என்பன போன்ற மொழித்தொடர்கள் இந்தக் கூட்டு வழிபாட்டு முறைகளை நமக்கு உணர்த்துவதோடு, மக்கள் சங்கத்தின் ஆற்றலையும் நமக்கு அழுத்திக் காட்டுகின்ற சான்றுகளாக விளங்குகின்றன!

தனி மனிதன் தனது தனிப்பட்ட யோகப் பயிற்சியினாலோ அல்லது உடம்பின் ஞான நிலையங்களை ஏகத்திலே இருந்து தனிப்பட்ட முறையில் இயக்குவதினாலோ, இறை இன்பத்தைத் துய்க்க முடியும் என்பதை உணர்ந்து கண்டு, பயின்றும் /பயிற்றுவித்தும் வந்த ஞானியர்கள் , கூட்டு வழிபாட்டின் வேகத்தையும் ஆற்றலையும் அதற்குப் பொதுமக்களிடம் உள்ள செல்வாக்கையும் கண்ட பின்பு, நமது நெறிமுறையிலும் கூட்டு வழிபாட்டுக்கு வகுக்கப்பட்டுள்ள பற்பல உபாயங்களையும் மக்களிடையே பரப்பத் தொடங்கினார்கள்.

இந்த முயற்சியின் விளைவாக, தமிழகத்து பொது மக்களிடையே நமது பண்டைச் சமயங்கள் மீண்டும் மறுமலர்ச்சி பெறத் தொடங்கின. அந்த மறுமலர்ச்சியிலே திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள், அவ்வையின் அகவல் போன்ற தனி நூல்கள் ஆகியவற்றுக்கு ஒரு பெரிய முக்கியமும் செல்வாக்கும் ஏற்படத் தொடங்கின. இதற்குக் காரணம் இந்த நூல்களில் உள்ள பாடல்களின் போக்கிலேயே, கூட்டுவழிபாடும் அடியார்களின் விண்ணப்பங்களும் கோரிக்கைகளும் உரிய முறையிலேயே இடம்பெற்று விளங்குகின்றன.

இத்தகைய விண்ணப்ப முறையிலான வரிகளே மேற்கண்ட இரண்டு அடிகளும் ஆம்.

வழிபாடு செய்கிற தொண்டனின் குரலிலே அவ்வையார் விநாயகரிடம் விண்ணப்பிக்கிறார். தனக்கு அருளவேண்டும் என்ற கோரிக்கையை ஒரு விண்ணப்பத்தின் முறையிலே, எவ்வாறு அந்த

அருளை வழங்கவேண்டும் என்பதையும் கூறி வேண்டுகிறார். தாயைப் போல் தனக்கு இரங்கி வரவேண்டும் என்கிறார்.

இறையாற்றலின் தத்துவங்களிலே தாய்த்தத்துவம் என்றும், தாதைத் தத்துவம் என்றும் இரண்டு உண்டு. இந்த இரண்டும் இரண்டு வகையான தன்மை உடையன. தாதைத் தத்துவம் ஆற்றலின் மயமானது. தாய்த்தத்துவம் அன்பின் மயமானது. எனவேதான் அன்பையும் ஆற்றலையும் இணைத்து வணங்குகிற வழிபாட்டு நெறியிலே, பரம்பொருளை அம்மையப்பனாக வடிவம் தந்து வணங்குகிற முறை நிலவிவருகிறது.

'தாயுடன் சென்று தந்தையைக் கூடல்' என்ற யோக நெறியிலும் இந்த முறை பேசப்படுகிறது என்பதை ஏற்கனவே பார்த்தோம். அது சந்திர கலையைக் கொண்டு சூரிய கலையை அணுகுகிற முறை. அதேமுறைதான் வழிபாட்டு நெறியிலே தாயினுடைய இரக்கத்தின் துணைகொண்டு, தந்தையை வேண்டுகிற முறையாகப் பரிணமிக்கிறது.

நம்முடைய புராணக் கதைகளிலும், பக்தன் படுகிற வேதனையைக் கண்டு, அம்மை மனம் தாளாது அப்பனை அருள்புரியத் தூண்டுவதாகப் பல கதைகளைப் பார்க்கிறோம். மேலே கண்ட தத்துவ உண்மையைத்தான் இந்த கதைகள் இவ்வாறு நமக்கு உணர்த்துகின்றன. அவ்வையாரும் இந்த வரிகளிலே அந்தத் தத்துவ உண்மையின் பயனை உள்ளடக்கிய தாயின் உள்ளத்தோடு விநாயகர் அருள் செய்ய வேண்டும் என்ற வேண்டுகிறார். அப்பன் தன்னை ஆட்கொள்ளுவதற்கு அம்மையின் இரக்கம்தான் தூண்டுகோலாக அமைய வேண்டும் என்பதே குறிப்பாகும்.

இதே வரிகளைச் சித்தர்களின் ஞான முறையிலே நோக்கினோமானால், உணர்வுமயமான இடகலையினோடு சென்று, அறிவு மயமான பிங்கலையிலே கூடும்பொழுது, முக்கண் திறக்கிறது என்பது தத்துவ இரகசியம் ஆகும்.

மாயப் பிறவி மயக்கம் அறுத்து

இந்த வரி சில பாடல்களில் 'மாயாப் பிறவி' என்று அச்சிடப் பெற்றுள்ளது. அந்தப் பாடத்தைக் கொண்டோமானால் மாயாப் பிறவி என்பதன் பொருள், மாய்தல் இல்லாத, அதாவது ஓய்வு ஒழிவு இல்லாத நித்தியமான தனி உயிர் என்ற பொருளாகும். 'பதியினைப் போல் பசுவும் அநாதி' என்பது சித்தர் வாக்கு, முப்பொருள் உண்மை என்ற அடிப்படையினை உணர்த்துகிற திருமந்திரத்தில் இதையே,

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி

என்று திருமூலர் பாடுகிறார். அநாதி நித்திய முப்பொருள்களாவன பரம்பொருள், தனி உயிர், பாசம் அல்லது பிணைப்பு என்ற மூன்றும் ஆம். எனவே மாயாப் பிறவி என்னும்போது நிலையான முப்பொருள்களிலே ஒன்றான உயிரை அது குறிக்கிறது.

'மாயப் பிறவி' என்ற பாடத்தை எடுத்துக்கொண்டோமானால் மாயையின் வசமான தனி உயிரின் பிறப்பிறப்புச் சூழல் என்று பொருளாகும்.

தனி உயிருக்கு ஓய்வு ஒழிவின்றிப் பிறப்பிறப்பு என்னும் சக்கரம் சுழல்வதன் காரணம் மாயையே ஆகும். அது, தலைவனை உணர மாட்டாது உயிரை மயக்கத்திலே சிக்க வைக்கிறது.

பதியணு கிற்பசு பாசநி லாவே

என்பது திருமந்திரம். தலைவனுடைய உணர்வு பசுவாகிய உயிருக்கு ஏற்படும்பொழுது, பசுவைப் பிணைக்கும் பாசம் அதனொடு சேர்ந்து நில்லாது கழன்றுவிடுகிறது. ஆகவே மயக்கத்திலே இருக்கும் மன்னுயிருக்கு, அந்த மாயப் பிறவிமயக்கை நீக்கவல்லது தலைவனை அறிகின்ற மெய்யுணர்வேயாகும். அறிவு அதனை அறியாது. உணர்வுதான் அந்த அறிவை உயிருக்குக் கூட்டுவிக்க வேண்டும். அதாவது தாய்த் தத்துவமானது உணர்வாக நின்று உணர்த்தி, உயிரைத் தந்தையின்பால் கூட்டுவிக்கவேண்டும். இதனைத்தான் அவ்வையார்,

தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்து

என்று பாடுகிறார்.

இஃ, உணர்வு என்ற நிலையானது எங்ஙனம் தொழிற்படுகிறது என்பதை, ஞான மொழியிலே அவ்வையார் பேசுகிறார்.

திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளம்தனில் புகுந்து

வழிபாட்டு முறையிலே ஐந்தெழுத்தாகிய 'நமசிவய' என்னும் மூல மந்திரம், குருவின் வாய்மொழியாகச் சீடனுக்கு உபதேசிக்கப் பெற்று, அந்த மந்திரம் கொண்டு சீடன் முன்னேறுவது மரபாகும். இது தொண்டு நெறியின் வழிபாட்டு முறை. இதையே யோக ஞான நெறிகளிலும் இரகசிய முறையாகச் சித்தர்கள் உணர்த்தியுள்ளார்கள்.

ந, ம, சி, வ, ய ஆகிய ஐந்து எழுத்துக்களையும் உடம்பின் ஐந்து நிலையங்களாக நம் நாட்டுச் சித்தர்கள் நமக்கு கூறியுள்ளார்கள். இடநாடி, பிங்கல நாடி ஆகிய பாதத்திலே 'நம' தொடங்கி, தோள்களில் 'சி'யும், வாயில் 'வ'வும் தலையில் 'ய' வும் மண்டலம் கொள்கின்றன என்பது, சித்தர் இலக்கியம் உணர்த்துகிற ஒரு பெரிய இரகசியமாகும். இந்த இரகசியத்தைத் திருமூலர் ஓர் அரிய பாடலிலே பொதிந்து தருகிறார்.

ஆகின்ற பாதமும் அந்நவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற இருதோள் வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற அச்சுடர் யவ்வியல் பாமே

நமசிவய என்னும்பொழுது மூலக்கனலானது கீழிருந்து மேல் எழுகிறது. சிவாயநம என்னும்பொழுது மேலிருந்து கீழ் இறங்குகிறது. இதைத்தான் பல சித்தர்கள் தங்கள் பாடல்களிலே 'ஏற்றி இறக்குதல்' என்று குழூஉக் குறியிலே பாடுகிறார்கள்.

மூலக்கனலை ஏற்றி இறக்குகின்ற முறையே சித்தர்களின் ஞான யோகப் பயிற்சி முறையாகும். இப்படி ஏற்றி இறக்கும்போது உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களும் கண் திறந்து இயங்கத் தொடங்குகின்றன. ஐம்புலனும் மடைமாறுகிற செயல் நிகழ்கிறது. அப்போது இருள்மயமான உடம்பு ஒளிமயமாகிறது. சாதாரண மனிதன் ஞானியாகிறான். இதுவே சித்தர் இலக்கியத்தின் நோக்கமும் பயனுமாம். இதனால் தான் இந்தப் பயிற்சி முறைக்குச் சித்தர் இலக்கியத்திலே ஒப்பற்ற இடம் தரப்பெற்றுள்ளது.

ஐந்தெழுத்தின் இந்த நுட்பங்களையெல்லாம் ஆராய்ந்து கண்டு அனுபவித்திருக்கும் சிவயோகி இரத்தினசபாபதியாரின் அரியதொரு விளக்கத்தை, அவ்வையாரின் இந்த ஐந்தெழுத்துக் குறிப்பை ஒட்டி நாம் இங்கு காண்பது பொருத்தமாகும்:

"சிவாய என்றபோது தோள்களுக்குமேல் உள்ள ஒளியாகும். இது 'ப' என்ற எழுத்துப்போல் தோள்களில் மேல்முகங்கொண்டு விளங்கும் ஒளிமண்டலமாகும். ஒளிமண்டலததில் உள்ள 'சிவாய நம' வான தேகத்தைத் தாழ்த்தி எழுந்து நிற்பதால், இதற்கு ஓதுமுறை சிவாயநம ஆயிற்று. சிவாய என்பதும், பிரணவத்தில் உள்ள விந்து நாதங்களும் ஒன்றேதான். பிரணவத்தைக் கொண்டோ, பஞ்சாக்கரமாகிய சிவாயநம கொண்டோ ஒளியை அறிந்திடில், முகத்தின் முன் ஒளி தோன்றிவிடும்.

எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவென்னுங்
குளிகை யிட்டுபொன் னாக்குவன் கூட்டையே

என்பது திருமந்திரம்.

அல்லது சிவாய சிவ சிவ என்பதும் மலமற்ற பஞ்சாக்கரமாகும்.

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே

(திருமந்திரம்)

'பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து' என்றதனால், தேகங்கடந்து சிரசின் மேலுள்ள துவாதசாந்த வெளியில் ஒளியாய் விளங்கி என்று பொருள். சிரசின்மேல் உள்ள ஆகாயப் பகுதியிலே தான் சிவசத்தியின் வியாபகமான நிர்வத்தியாதி கலைகளும் இந்திகையாதியான சிவகலைகளும் விளங்கும் சாந்தியதீதை கலையுள்ளது. இது ஆங்கிலத்தில் **'Ethenic Brain'** என்று கூறப்படுகிறது. இதன் தொழில் நிலை முன்மூளையிலும் பின்மூளையிலுமாக உள்ளது.

உள்ளுதலின் காரியம் மூளையில் உள்ளது; காரணம் தேகமற்றதாய் உள்ளது. மனிதனின் காரண சரீரம் தேகத்தில் இல்லை; தேகங்கடந்ததாய் இருந்துகொண்டே தேகத்தை யுண்டாக்கி அதிலும் ஆட்சி செய்கிறது. தேகங்கடந்த நிலையில் அறிவு பதித்துவிடுவதால்

சில ஞானிகள் அறிவின் செயலின்றியே பித்தர், பாலர், பைசாசர் தன்மையில் விளங்குகின்றனர்".

இந்த விளக்கத்தின் தொடர்பாக நம் சிவயோகியார் கீழ்க்கண்ட இரண்டு திருமந்திரப் பாடல்களையும் நினைவூட்டுகின்றார்.

சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநங்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் பாதமே

போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்
நாதன் நடந்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே

அவ்வையாருடைய பாடலில் ஐந்தெழுத்தை ஓதுவது என்று மட்டும் குறிப்பிடாமல், ஞான நுட்பத்தோடு இந்த ஐந்து எழுத்துக்களும் பொருந்தும்படியாக உள்ளத்தில் வந்து புகவேண்டும் என்று மொழிந்துள்ளதை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

எழுத்தும் அதன் ஒலியும், சொல்லுகிற நாவின் செயலும் கேட்கிற செயலுமாம். இது ஒருவகை. ஆனால் இந்த எழுத்துக்களின் உள்ளொலிகள் தெளிவாகப் பொருந்தும்படி உள்ளத்திலே வந்து புகவேண்டும் என்று அவ்வையார் குறிப்பிடுவதால், இந்த ஒலிகளுக்குள்ள ஆதார நிலைகள் அனைத்தும் இணைந்து ஒலிக்க வேண்டும் என்னும் உட்பொருள் காணக் கிடக்கின்றது. அதனால்தான் ஐந்தெழுத்தைப் பற்றிய இந்த ஞான உரைகளை உட்புகுந்து பார்க்க வேண்டிய அவசியம் இந்த வரிகளில் உணர்த்தப்படுகிறது. எனவே, ஐந்து எழுத்துக்களில் நிலையங்களைப் பெரியோர்கள் இந்த வரியின் பொருளாக நமக்கு எடுத்துச் சொல்லியுள்ளார்கள்.

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென

இந்த வரிகளிலே மிகவும் முக்கியமான சித்தர்களின் ஞானக் கருத்துக்கள் ஆழமாகப் புதைந்துள்ளன.

இந்த வரிகளில் உள்ள மூன்று சொற்றொடர்கள் மிகவும் நுட்பமான ஆன்மப்பொருள் கொண்டவை. அவையாவன: ஒன்று, குருவடிவு: இரண்டு, குவலயந் தன்னில்; மூன்று, திருவடி வைத்து.

ஒரு மாணவனுக்கு அவனுடைய ஞானப் பயிற்சியிலே இரகசியங்களை உணர்த்துகின்ற ஆசிரியர்கள் மூவராவர்.

நூற்பாக்களைக் கற்று, அந்தக் கல்வியின் மூலம் அவன் பெறுகின்ற நூலறிவு அவனுக்குக் கிட்டும்படி செய்பவர் நூலாசிரியர் ஆவார். இவர் குருமார்களின் ஆரம்ப இனத்தைச் சேர்ந்தவர்.

இனி, அவன் தனது பயிற்சியைத் தொடங்குவதற்கு நூலறிவுமட்டும் அவனுக்குப் போதுவதில்லை. சொற்களின் சில பூட்டுக்களைத் திறந்து காட்டவல்ல அனுபவம் உடையவரும், உடம்பின்

ஆதாரநிலைகளையும், ஆன்ம ஆற்றல்களையும் செயல்மூலம் செய்துகாட்ட வல்லவருமான ஒரு நேர்முக ஆசானின் உபதேசம் அவனுக்கு அவசியமாகியது. இத்தகைய நேர்முக ஞானத்தை அவனுக்குக் குரு வடிவிலே நேர்முகமாகத் தோன்றி, தொட்டும் பயிற்றுவித்தும் காட்டவல்ல இத்தகைய ஆசான் இரண்டாவது நிலையில் உள்ள புறக் குரு ஆவார்.

இதற்கமேல் ஒரு நிலை இருக்கிறது. நேர்முக ஆசான் கற்பித்த பயிற்சிகளை, உடம்புக்குள்ளே இயங்குகின்ற கடவுள் ஆற்றலான பரம்பொருட் சக்தி திருவருளோடு அவனுக்கு உணர்த்த வேண்டியது இருக்கிறது. இத்தகைய உள் உணர்வை எழுப்பி இயக்க வல்லவன் பரம்பொருளாகிய இறைவனே. அவன் உடம்பிலே குடியிருந்து உணர்த்துகிற பரமகுரு ஆவான்.

ஆகவே, குருவாகி வந்து உணர்த்த வேண்டும் என்ற வேண்டுகோளிலே, இந்த மூன்று வகையான ஆசான்களின் வல்லமைகளும் பேசப்பெறுகின்றன.

சித்தர்களுடைய ஞான மொழியிலே குரு என்ற சொல்லுக்கு ஒளி என்ற பொருளாகும். உள்ளத்திற்குள்ளே ஒளிந்து வாழ்கின்ற கருணை வடிவான இறைவன், ஒளியைக் காட்டி ஞானத்தை உணர்த்துகிறான். இந்த ஒளிப் பயிற்சியினோடு மாணவனுக்கு ஒலி அனுபவமும் இணைந்து கைகொடுத்து உதவுகிறது. இதுவே ஞான யோகத்தின் கல்வி அனுபவம் ஆகும்.

'குவலயம்' என்ற சொல்லுக்குக் குவளை மலர் என்பது பொருள். உலகம் என்பதற்கு ஞானிகள் ஆன்மப் பொருள் கூறுவது இங்கே சிந்திக்கற்பாலது. ஞானிகளின் உலகம் அக உலகமாகும். அந்த அக உலகம், ஞானக் கண்ணிலே புலனாகின்ற ஒளி வடிவமானது. எனவே 'குவலயம்' என்ற சொல்லுக்குச் சித்தர்களின் இலக்கியத்திலே குவளைமலர் போன்ற கண்கள் என்பது ஆன்மப் பொருள் ஆகும்.

கண்களூடு புலனுக்குத் தோற்றம் தருகிற உள்ளொளியானது மூலாதாரத்திலிருந்து எழுந்து கண்களிலே இயங்குகிறது. இந்த இயக்கம் ஞானப் பயிற்சியினால் விளைகின்ற பலனாகும்.

கனலின் தன்மை வெப்பமும் ஒளியுமாம். மூலாதார நிலையிலே நெருப்பாக இருந்த ஞானக் கனல், கண்களிலே ஞான ஒளியாக இயங்கத் தொடங்குவதுதான் ஞான பயிற்சி மாணவனின் அடிப்படைக் கல்வியாகும். ஞான நூல்கள் இந்தக் கல்வியைப் பற்றி ஆயிரம் ஆயிரம் சொற்களிலே ஏட்டுக்கல்வியாக எழுதி வைத்துள்ளன. இதனை நேர்முக ஆசான் அநுபவத்திலே புலனாகும்படி காட்டுகிறான். அப்போது மூலக்கனல் எழுந்து சந்திரன் ஒளியைப் போலப் பரிணமிக்கத் தொடங்குகிறது. அந்தச் சந்திரனின் ஒளியிலே குவளை மலராகிய அகக்கண் நன்கு மலர்கிறது. இரவிலே சந்திரன் ஒளியிலே மலரக்கூடிய பூ அல்லவா குவளை! அவ்வாறுதானே ஞானக் குவளையும் மலர்கிறது!

குரு என்னும் அக ஒளியானது முழுமைபெற்று ஞான அமைதியை வழங்கத் தொடங்குகிறது. இந்த நிலையைத்தான் யோக நூல்கள் 'சாந்தியதீத கலை' என்று அழைக்கின்றன.

'திருவடி வைத்தல்' என்பது ஞான குருவானவன் தனது திருவருளினால் அகக் கண்ணிலே இந்த மலர்ச்சி தோற்றுமாறு தன் திருவருளைக் கொண்டு தொடுவதாகும். திருவடி வைத்தல் என்றும் 'ஸ்பரிச தீட்சை' என்றும் சித்தர் இலக்கியம் இதை அழைக்கிறது.

மாணிக்கவாசகர் தமது திருவாசகத்திலே பாவியேனுடைய ஊனினை உருக்கி என்றும், 'உள்ளொளி பெருக்கி' என்றும் பாடுகிறார். உள்ளொளி பெருகுவதற்கு ஆரம்ப நிலை ஊன் உருக வேண்டும் என்பதாகும். ஊன் உருகுவது மூலாதாரத்திலுள்ள கனலின் எழுச்சியினால். இந்த உருக்கத்திலிருந்து அக உடலிலே ஒளி கிடைக்கிறது.

மெழுகுவத்தி எரிகிறது. எரியும்பொழுது அந்த மெழுகு உருகுகிறது. அந்த உருக்கத்தின் பயனாக ஒளி சுடர்கிறது. மனித உடம்பின் தன்மையும் இதுவே.

பருப்பொருளாக அமைந்துள்ள இந்த உடம்பின் உருக்கம் அதிகரிக்க அதிகரிக்க, அக உடல் ஒளிமயமாகிறது. ஊன் உருகுவதும் உள்ளொளி பெருகுவதும் இவ்வாறு நிகழ்கின்றன. இதற்குரிய பல பயிற்சிகளை நம்முடைய நாட்டுச் சித்தர் இலக்கியம் விரிவாகப் பேசுகிறது. நமது நாட்டு ஞானிகள் இந்த பயிற்சிகளை மாணவர்களுக்குக் கற்பித்து, உடம்பின் உருக்கத்தினால் மூலக்கனல் ஞான ஒளியாகப் பரிணமிக்கும் வித்தையைக் கற்பித்து வந்துள்ளார்கள்.

வலக்கண்ணைச் சூரியன் என்றும், இடக்கண்ணைச் சந்திரன் என்றும் அழைக்கும் மரபு நமக்குத் தெரியும். இந்தச் சூரிய சந்திரர்களின் இயக்கமே கனலும் ஒளியும் எழுவதற்குக் காரணமாக அமைகிறது. வெப்பத்தைத் தருகிற சூரியனும், தண்மை நிலவைப் பொழிகிற சந்திரனும் இரண்டு வகையான ஒளியாற்றல்கள். இந்த ஒளி ஆற்றலுக்கு அடிப்படையாக அமைவது மூலக்கனலே ஆகும். அது மின் ஆற்றலைப் போன்றது. அந்த மின் ஆற்றல் மின்சார அடுப்பாகவும் எரியும்; மின்சாரக் குமிழாகவும் ஒளிவீசும். எந்தெந்த நிலையங்களிலே இந்த மின் ஆற்றலைக் கொண்டுவந்து இயக்குகிறோம் என்பதைப் பொறுத்தே, கனலும் ஒளியும் பிறக்கின்றன.

கனல் என்பது அறிவின் செயல்; ஒளி என்பது அன்பின் செயல். பேரறிவாகிய ஞானத்தின் வசமாகும்பொழுது கனலானது ஒளியாகிறது. இதைத்தான் சித்தர்கள் ஞானம் சமைந்தது என்று கூறுகிறார்கள்.

சமைதல் என்பது பக்குவப்படுதல் என்ற பொருள் தரும். அகஉடம்பு சமையும்போது ஞானக் கருவுக்குரிய 'கருப்பக்கிரியை' என்னும் உள்வாங்கும் ஆற்றல் கண் திறக்கிறது. குவளை மலர்வது என்பது இதுவே ஆகும். ஞானக் கன்னி பூப்பெய்தினாள், திரண்டாள், சமைந்தாள் என்றெல்லாம் பல மொழிகளிலே இந்த ஞானச்சடங்கு

பேசப்பெறுகிறது. இதைத்தான் திறத்தின் பொருள் என்பார்கள். அதுவே பேரறிவாகிய ஞான்த்திறத்தின் செம்பொருள் ஆகிய பக்குவ நிலையாகும்.

வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே

ஞானப் பேரின்ப அநுபவத்தில் வாட்டம் நாட்டமாகி, நாட்டம் இறையுணர்வோடு ஒன்றுகிற பயிற்சியாகிறது. நாட்டத்தில் வாட்டம் மறைகிறது. பயிற்சியில் நாட்டம் ஒன்றிவிடுகிறது. எனவே வாட்டம் மறைவதற்கும் நாட்டம் முனைப்பில் கூடுவதற்கும் குருவே காரணராகிறார். அந்த ஆசான் தொடக்கப் பாடமாக ஞானக் கல்வியிலே கற்பிப்பது கடைவாய்ப் பல்லைக்கொண்டு செய்கின்ற ஒரு யோகப் பயிற்சி முறையாகும். மூலக்கனல் மேல் எழுந்து செல்வதற்கு இந்தப் பயிற்சியே தொடக்கமாகிறது. இந்தப் பயிற்சியைத்தான் ஞானிகள் கோடாயுதப் பயிற்சி என்பார்கள். அக உடலிலே பற்களின் செயலானது கொம்புகொண்டு செய்கின்ற ஒரு வித்தையாகும். இந்த ஞானச் செயலே வினைகளைக் களைவதற்கு ஆரம்பப் பயிற்சியாகும்.

பல்லின் பயிற்சியும் கண்களின் பயிற்சியும் ஆசான் கற்பிக்கிற முறையில் நடக்க வேண்டும் என்பதோடு கூட, குருவானவன் நேரில் இருந்து அதை வழிப்படுத்தவேண்டிய அவசியமும் கொண்டதாக இந்தப் பயிற்சி அமைந்துள்ளது. வெறும் ஏட்டுப் படிப்பு இந்தப் பயிற்சிக்குத் துணை செய்வதில்லை.

குருவானவன் மாணவனிடம் கருணை கொண்டு அவனுடைய பயிற்சிகள் ஒவ்வொன்றுக்கும் பரிவோடும் மகிழ்ச்சியோடும் வழி நடத்திச்சென்றால்தான், ஞான பரிபக்குவம் ஒருவனுக்குக் கிடைக்கும்.

பொதுவாக வழிபாட்டு முறையிலே இரண்டு வகைகள் கூறப்பட்டுள்ளன. ஒன்று, புறத்தே செய்யும் பூசனை முறை; மற்றொன்று, அகத்தே செய்யும் பூசனைமுறையாகும். திருமூலர் போன்ற சித்தர்கள் இந்த இரண்டுவிதமான பூசனைகளையும் பற்றி விரிவாகப் பாடியுள்ளனர்.

புறத்தே செய்யும் வழிபாட்டுக்கு ஐந்துவிதமான காணிக்கை முறைகள் சொல்லப்பட்டுள்ளன. இவற்றை வடநூலார் 'பஞ்சோப சாரம்' என்ற கூறுவர். அவையாவன : சந்தனமிடுவது, பூக்கொண்டு தூவுவது, வாசனைப்புகை காட்டுவது, சுடர் காண்பிப்பது, படையல் இடுவது ஆகியன.

அகப்பூசனை செய்யும் ஒரு ஞானி இவற்றைச் செய்வதில்லை. அவனுக்குச் சந்தனம் என்பது உலக ஆசையை இறை பற்றாகக் கமழும்படி செய்வது. அவனுடைய படையல் எல்லாம் மனத்தின் செயல்களே. உந்திக் கமலமாகிய தண்ணீரின் இருப்பிடத்தை அவன் மாற்றும்போது தன்னையே படையலாகச் செய்கிறான். அவன் காட்டுகிற வாசனைப் புகை உடம்பிலுள்ள வாயுவைக் கொண்டு நிகழ்கிறது. அபானன் மேல் எழுகிற செயலாகும் அது. ஞானியினுடைய ஆன்ம ஒளி சுடர்காட்டும் செயலாகிறது. வான மயமான

பெருவெளியில் அவனுடைய மனம் ஒன்றும்போது அதுவே அர்ச்சனையாகிறது. இவையே அவனுடைய ஐம்பூதக் காணிக்கையாகும்.

ஐம்புலன்களின் செயலாகிய கேள்வி, ஊறு, காட்சி, சுவை, நுகர்ச்சி ஆகியன ஓசையில் ஒடுங்கும்போது உடலின் செயல் அடங்கிச் சமாதி நிலை கூடுகிறது. அப்படிப்பட்ட ஞான ஒழுக்கம் ஒரு மாணவனுக்கு வசமாகும்போது ஐந்து புலன்களும் வாடா விளக்காக ஒளிவீசத் தொடங்குகின்றன. இதைத்தான் திருமூலர் பாடினார்:

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

இப்பாடலிலே பெருங்கோயில் என்றும், ஆலயம் என்றும் இரண்டு சொற்கள் வருகின்றன. இவ்விரண்டும் ஒரு பொருள் குறித்த கிளவிகள் அல்ல. ஆலயம் என்பது முழுமையான கோயில். பெருங்கோயில் என்பது கருவறை. சீவன் சிவத்தைப் பூசிக்கும் முறை என்றும், தன்னையே தான் அர்ச்சித்துக் கொள்ளல் என்றும், 'என்னை விட்டென்ன உசாவுதல்' என்றும், இன்னும் பலவிதமாகவும் சித்தர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய அக வழிபாடு செய்கின்ற ஞானிகள் புறச் சடங்குகளினின்று விடுபட்டவராவர். அவர்களுக்கு நீரும்பூவும் இந்த உடம்புக்குள்ளேயே உள்ளன. அவர்கள் புறப்பூக்களைப் பறித்து இறைவன் திருவடிகளிலே தூவ வேண்டியவர்கள் இல்லை. மனமாகிய மலர் கொண்டு அர்ச்சிப்பவர்கள் அவர்கள். அவர்கள் ஆடுகிற தீர்த்தங்கள் எல்லாம் உள்ளத்திலேயே சுரந்து பெருகியுள்ளன.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்

என்று திருமூலர் பாடுவது இந்த அக உலகின் நீர்நிலைகளையே.

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே

என்பது திருமந்திரம்.

இந்த உடம்புக்குள்ளே அகப்பூசனைக்கு வேண்டிய அத்தனை பொருள்களையும் இட்டு நிரப்பி அப்பனாகிய இறைவன் நமக்கு வழங்கியுள்ளான். இந்த இரகசியங்களைத் தெரிந்து வழிபடுவதற்கு அவனே காரண குருவாக வந்து தோன்றுவதும், ஞான குருவாக உள்நின்று உணர்த்துவதும் ஆகிய அருட்செயல்களைச் செய்கிறான். இந்த உண்மையை மேல் வரும் அகவல் அடிகள் தொடர்ந்து உணர்த்துகின்றன.

உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி

இத்தனை கல்வியையும் செய்ய வேண்டியவன் இறைவனே. அந்தச் செயலுக்கு உரிய வடிவமே விநாயகர்.

தாயுமானவர் தெய்வத்தை 'அறிவான தெய்வமே' என்று பாடுகிறார். அந்த அறிவான தெய்வம் 'சித்தமிசை குடிகொண்டுள்ளது' என்கிறார். அது 'சத்தானது' என்றும், தேடரிய சத்து என்றும் மேலும் கூறுகிறார். இவ்வாறு சித்தத்தில் குடிகொண்டு அறிவுக்கு அறிவை உணர்த்துகின்ற பேருயிர்க் கல்வியானது, தெவிட்டாத தேனாகும். உயிருக்கு அது உவட்டாத உணவு.

அவ்வையார் அறிவுமயமான இந்த ஞான உபதேசத்தை உயிருக்கு உரிய உவட்டாத உணவு என்றும், பருகப் பருகத் தெவிட்டாத ஞானத் தெளிவு என்றும் பாடுகின்றார். தெளிவும் தேறலும் ஞானத் தேனின் சித்தர் மொழிகள்.

உவட்டுகிற அளவுக்கு உணவு உட்கொள்ளுகிற உடம்பு தாமச குணத்தின் வசமாகி, அறியாமையில் உழல்கிறது. ஆனால் ஞான உணர்வு இதற்கு நேர்மாறானது. உலப்பிலா ஆனந்தமாய தேனைச் சொரிகின்ற ஞானத் தாயாகி நிற்கின்றவன் இறைவன். அவன் சித்தமிசை குடிகொண்டு புகட்டுகிற ஞான உணவு அகச் செவியின் வழியே புகுவதாகும். அது உவட்டுவதில்லை. அம்மட்டோடு நில்லாது, பயிலப் பயிலத் தெவிட்டாத தேனாகத் தித்தித்துக் கொண்டே செல்கின்ற தன்மையதாகும்.

இறை முயக்கம் என்பது எல்லையற்ற சுகத்தைத் தருவது. அதனால்தான் ஞானிகள் அந்தச் சுகத்தைப் பேரின்பம் என்றார்கள். மாணிக்கவாசகர் 'குறைவிலா நிறைவே' என்றும், 'கோதிலா அமுதே' என்றும் இந்தப் பேரின்பத்தை வியந்து பாடுகிறார். இத்தகைய உலப்பில்லாத ஆனந்த நிலையைத்தான் ஞானிகள் சித்தயோக நிலை என்றும், சச்சிதானந்த யோகம் என்றும், இரவுபகல் அற்ற இன்பநிலை என்றும் பல மொழிகளில் பாடுகிறார்கள்.

இந்த ஆனந்த நிலைக்கு மனித உயிரை அழைத்துச் செல்கின்றவன் தும்பிக்கை மூர்த்தியே. அதனால்தான் அவனிடம் உவட்டாத உபதேசத்தைப் புகட்டுமாறும், செவியிலே தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டும்படியும் அவ்வையார் வேண்டுகிறார்.

உண்ணுகின்ற தேனை ஊட்டுவது போலே உணர்விலே நுகர்கின்ற தேனைக் காட்டுவதே முறை. காட்டுவது என்றால் உணர்த்துவதும், செய்து காட்டுவதும், துய்ப்பதும் ஆகிய உபதேச நெறியாகும்.

ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி

மனம் என்பது ஒன்றைப் பற்றும்பொழுது இன்னொன்றை விட்டு விடுகிறது. இது காரணம் பற்றியே உலகப்பற்றை விட வேண்டுமானால், இறைவனைப் பற்றிக் கொள்வதே வழி என்று ஞானிகள் கூறுகின்றார்கள்.
திருவள்ளுவரும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று அரியதோர் முறையிலே பாடுகிறார்.

புற உலகிலே மனத்தை ஈடுபடுத்தாமல் அக உலகிலே திருப்பும் பொழுது அதனுடைய மடை மாறிவிடுகிறது. இதனால் இரண்டு பயன்கள் விளைகின்றன. முதலாவது பயன், புற உலகின் கதவு மூடிவிடுகிறது. இரண்டாவது பயன், அக உலகின் கதவு திறந்து விடுகிறது. இது பேரறிவு கொண்டு செய்கின்ற செயல். அதுவே ஐம்புலன் அடக்கம் என்பது. புலனின் வழிச் செல்கின்ற பற்றானது உணர்ச்சியின் பாற்பட்டது. புலனை ஒடுக்கும் வழியில் செல்கின்ற பற்று அறிவின்பாற்பட்டது.

அந்தப் பற்று அறிவு மயமானதாக இருப்பதால் பற்றற்ற இடத்தை நோக்கி அது செல்கிறது. இதுவே இப் பயிற்சியின் நோக்கமாகும். இதைத்தான் 'பற்றற்றான் பற்றைப் பற்றுக' என்று திருக்குறள் ஓதுகிறது. அத்தகைய பற்றைப் பற்றும்பொழுது, புற உலகினை நோக்கிச் செல்லும் இச்சையாகிய பற்று தானாகவே அற்று விடுகிறது. அதுவே ஐம்புலன்களும் அடங்குகிற நிலை. ஞானிகள் கூறுகின்ற பயிற்சி இத்தகைய புலன் அடக்கமே ஆகும். இதைத்தான் அவ்வையார் புலனை அடக்குகின்ற உபாயம் என்கிறார்.

இந்த உபாயம் இறைவனுடைய பற்றின் மேலீட்டனால் நிகழ்வதற்கு வழி செய்கின்ற முறையாக இருப்பதால், இன்புறு கருணையில் இனிதாக இயங்குகின்ற முறையாக அமைகிறது. இதனை விட்டு ஐம்புலன்களை அடக்குவதற்கு ஒருவன் செய்யகூடிய மற்ற முயற்சிகள் எல்லாம் தொல்லை மிக்கன. பயன்தருவனவும் அல்ல. இன்ப மயமான நிலையை நோக்கி முன்னேறுவதற்கு உரிய வழியும், இவ்வாறு இன்ப மயமாகவே இருப்பது இதன் ஒப்பற்ற சிறப்பாகும். பற்றுக்களை விடுவதற்கு வேறில்லை வழி.

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

இந்த உடம்பில் உள்ள தத்துவங்கள் அனைத்தும் புற உலகை நோக்கிச் செல்லும் தன்மையன. கண் வெளியே பார்க்கிறது. அழகான காட்சிகளிலே பார்வை கூடுகிறது. காது வெளி ஒலிகளைக் கேட்கிறது. இனிமையான ஓசையிலே இன்பம் பெறுகிறது. மூக்கானது புற உலகில் இருந்து எழுகிற மணத்தை நுகர்கிறது. நறுமணத்தை அது துய்க்கிறது. நாவானது உண்ணும் பொருள்களை உட்கொள்ளுகிறது. சுவைமிகுந்த பண்டங்களை ஆர்வத்துடன் உண்கிறது. அதனோடு நாவானது உள்ளத்தை வெளிப்படுத்தும் கருவியாக வெளியுலகோடு தொடர்புகொண்டு இயங்குகிறது. உடம்பானது புறப்பொருள்களைத் தொட்டு அனுபவிக்கிறது. மெய்யின் சிலர்ப்பிலே ஆனந்தம் கொள்கிறது.

மனித உடம்பில் உள்ள ஐந்து கருவிகளும் அவற்றின் துணைக் கருவிகளும் புற உலகோடு இயைந்து இயங்குவதே உடம்பின் தன்மையாக விளங்குகிறது. இவ்வாறு தொடர்பு கொள்வதற்கு இந்தக் கருவிகள் புறத்தே நீண்டு செயற்படுகின்றன. இவை ஒடுங்குவதற்குப் பதிலாக எழுந்து இயங்குகின்றன. இந்த இயக்கத்தை உள்முகமாக ஒடுக்க வல்லவனே இறை இன்பத்தில் ஒடுங்குகிற யோகியாவான்.

வழிபாட்டு நெறி, சேவை செய்யும் நெறி, யோகப் பயிற்சி, ஞான ஒடுக்கம் ஆகிய நான்கு வழிகளில் செல்வாருமே, வெளியே செல்கின்ற கருவிகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தி இறை உணர்விலே மனத்தை ஒன்றச் செய்யும்போதுதான் சிற்றின்பமானது பேரின்பமாகிறது. உருவ வழிபாடு செய்பவனும்கூட, தனது வழிபாட்டுச் சடங்கின் உச்சத்திலே இமைகளை மூடிவிடுகிறான் அல்லவா! இதுவே ஒடுக்கம்.

உணர்வின் ஒரு நிலையிலே இமைகள் தாமாக மூடுகின்ற இந்த ஒடுக்கத்தைத் தானே முயன்று, தன் கருத்துப்படி ஒடுக்க முனைகிற கல்வியே சித்தர்கள் கற்பிக்கும் முறையாகும். விநாயகனுடைய திருவருளினால் இத்தகைய ஞானக்கல்வி வாய்க்கப்பெறும்போது, கருவிகளை ஒடுக்கும் உபாயம் கைகூடுகிறது. ஞான விநாயகனாகிய பரம குருவானவன் ஞானப் பயிற்சியின் மூலம் இந்த ஒடுக்கத்தைக் கற்பித்தருளுகிறான். இந்தக் கல்வி மனத்தின் நினைவுகொண்டு கருத்தினால் செய்கின்ற ஒரு வித்தையாகும். இதுவே கருவிகள் ஒடுங்கும் கருத்தை அறிவித்தல் என்னும் ஞானக் கல்வியாம்.

இனி, பிறவிச் சுழலுக்குக் காரணமாக அமைகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டு பிணைப்புக்களிலிருந்தும் உயிரானது விடுபட்டால் ஒழிய ஊழி ஊழியாக வருகின்ற மனஇருள் மாய்வதில்லை. தீவினையை இரும்பு விலங்கு என்று அழைத்தால், நல்வினையைப் பொன்விலங்கு என அழைக்கலாம். இரண்டுமே பிறவித் தளைகளே ஆம். நல்வினை நற்பிறவிக்கும், தீவினை தீப்பிறவிக்கும் வித்தாகின்றன. இந்த இரண்டும் அறுப்பதே பிறவி இருளைக் கடியும் வழியாகும். ஞானாசிரியன் இந்த இருவினைத் தளைகளிலிருந்தும் உயிருக்கு விடுதலை தருகிறான்.

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி

சித்தர்களின் உடல் அமைப்பு இரகசியங்களிலே தலைக்குள் நான்கு முக்கிய இடங்கள் சொல்லப்பெறுகின்றன. இந்த நான்கையும் ஞானத்தலங்கள் என்ற சித்தர் இலக்கியம் அழைக்கின்றது. இந்த நான்கிலும் நான்கு மூர்த்திகள் சொல்லப்பெறுகிறார்கள்.

தலையின் பின் மூளையானது 'சத்தியோசாதம்' என அழைக்கப்பெறுகிறது. இடப்பக்க மூளை 'வாமதேவம்' என அழைக்கப்பெறுகிறது. முன்பக்க மூளை 'தத்புருடம்' எனப்படும். வலப்பக்கத்து மூளை 'அகோரம்' என அழைக்கப்பெறுகிறது. இவையே சதாசிவ மூர்த்தியின் இயக்க நிலைகள்.

மனிதனுடைய மூளையில் உடம்பை இயக்குகின்ற ஆற்றலும், இந்த உடம்பினுக்கு அப்பாற்பட்ட பேராற்றலும், இந்த இரண்டுமே, பொதிந்து கிடக்கின்றன. மனிதனானவன் புற உலகத்தைப் பற்றி நிற்கின்ற இச்சையை ஒடுக்கும்போது, சதாசிவ மூர்த்தியின் ஈசான முகம் முனைப்புக் கொள்கிறது. அது ஒளிமயமானது. சாதாக்கியத்தில் இதனை அமூர்த்தி சாதாக்கியம் என அழைக்கின்றார்கள். இந்த நிலை கைகூடும்பொழுது கவிழ்ந்து இருக்கும் ஆயிரம் இதழ்கொண்ட ஞானத் தாமரையானது நிமிர்ந்து மலரத் தொடங்குகிறது. இதுவே சகஸ்ரதள மலர்ச்சி என்று சித்தர் இலக்கியத்தில் பெயர் பெறுகிறது.

இதனுடைய பயிற்சி முன்னேற்றத்தில் மூர்த்திகளின் நான்கு நிலைகளையும் கடந்து நிற்கும் நிலை சித்திக்கிறது. இந்நிலை கைகூடப் பெற்றவர் நிவர்த்தி கலை, வதிட்டை கலை, பிரதிட்டை கலை, வித்தியா கலை, சாந்தி கலை என்ற நான்கு கலைகளையும் கடந்து விடுகின்றன. இத்தகைய சாந்தியதீதை என்னும் கலையில் சதாசிவத்திற்கு ஆதிக்கம் இல்லை. இந்த ஞான இரகசியங்களை நேர்முகப் பயிற்சியின் மூலம் யோக மாணவன் பெறுகிறான்.

மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே

இறை உணர்விலிருந்து தனி உயிர் வேறுபட்டு இயங்கும்போது தன்முனைப்பு என்கிற ஆணவம் செயற்படுகிறது. அதைத் தொடர்வது தன்முனைப்போடு கூடிய செயலாகிய கன்மம். இவற்றிற்கு அடிப்படையாக அமைவது, தான் வேறு பரம்பொருள் வேறு என்கிற மயக்கமாகிய மாயை. இந்த மூன்றையும் பெரியோர்கள் மும்மலங்கள் என்றனர். ஞானத்தெளிவு கைகூடும்பொழுது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களின் மயக்கமும் அறுந்துவிடுகிறது. தன்னலம் மாறிப் பிறர்நலம் பேணும் தன்மை மிகுகிறது.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற மகத்தான கொள்கையிலே ஈடுபடுகின்ற ஒரு சமுதாய ஊழியனும்கூட, இத்தகைய பொது நலத் தொண்டிலே முன்னேற அவனுடைய ஆணவமலம் கரைவதோடு, அவனுடைய தன்னலக் கருமமும் மாறி நீங்கி விடுகிறது. பிறர் நலமே தன்னலம் என்ற முனைப்பிலே, தான் வேறு பிறர்வேறு என்ற மாயையும் அறுந்துவிடுகிறது. அந்நிலையில் அவனும் அப் பரம்பொருள் உணர்விலே ஒன்றியவனே ஆகிறான். இது சாதாரண நிலையில் உள்ள வழிபாடுகள் என்ற சடங்குகள் இல்லாத, இறைவனிடம் நம்மை அழைத்துச் செல்கிற, தொண்டு நெறியாகும். இந்நெறியிலும் மும்மலங்கள் அறுகின்றன.

இனி, ஓர் உருவத்தை வழிபடுகிறவன் அதனுடைய அழகிலும் அதற்குச் செய்கின்ற சடங்குகளிலும் ஒன்றும்பொழுது, ஆணவம் நீங்குகிறது. செயல் அனைத்தும் வழிபாடாவதால் கருமமும் மாறி நீங்குகிறது. தான் வேறு பரம்பொருள் வேறு என்ற மயக்கம் ஒழிவதால், மூன்றில் மற்றொரு மலமாகிய மாயையும் நீங்கிவிடுகிறது. இது வழிபாட்டு நெறியிலே மும்மலம் அகல்கிற முறை.

யோகியும் ஞானியும் முழுமையான முயற்சியோடு, தங்கள் பயிற்சியின் மூலம் சித்தர்கள் காட்டிய முறையிலே, யோகத்தையோ ஞானத்தையோ பயின்று, மூன்று மலங்களையும் களைந்து கொள்கிறார்கள்.

ஆகவே இறை உணர்வுக்கு அடிப்படையாக வேண்டப்படுவது மும்மல நீக்கமே ஆகும். விநாயகன் அந்த மும்மல நீக்கத்தை செய்து அருளுகிறான்.

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

இந்த உடம்புக்கு ஒன்பது வாயில்கள் உள்ளன. அவையாவன: கண்கள் இரண்டு, செவிகள் இரண்டு, மூக்கின் புழைகள் இரண்டு, வாய்

ஒன்று, ஆதனம் ஒன்று, குறி ஒன்று. இந்த ஒன்பது வாயில்களைச் சொல்லும்பொழுது, சித்தர்கள் மனித உடம்பை ஒன்பது வாயில் கோட்டை என்றே அழைக்கிறார்கள்.

ஐம்புலன் என்பது ஓசை, ஊறு, காட்சி, சுவை, நாற்றம் ஆகிய ஐந்தையும் அறிகின்ற அறிவாகும். ஒரு மந்திரம் என்பது பிரணவத்தை.

ஐம்புல அறிவு, ஒன்பது வாயிலையும் பயன்படுத்துகிறது. போக்கு வரவு என்பது ஐம்புல அறிவுக்கு இந்த ஒன்பது வாயில்களேயாம்.

சித்தர்கள் நேர்முகமாகச் சொல்கின்ற ஞான இரகசியக் கல்வியானது, ஒரு நுட்பமான பயிற்சியின் மூலம் இந்த ஒன்பது வாயில்களையும் போக்குவரவாக உடைய ஐம்புலக் கதவை அடைத்து விடுகிறது. ஐம்புலக் கதவைத் திறந்துகொண்டு வரும்போதுதான் உடலறிவானது ஒன்பது வாயிலின் வழியே செயற்படுகிறது. எனவே ஐம்புலக் கதவை அடைத்துவிட்டால் இந்த ஒன்பது வாயல்களிலும் போக்குவரத்து நின்றுவிடுகிறது. எப்படி என்றால், கண்பார்வையானது புறத்தே ஓடுவதில்லை. செவியின் கேள்வியானது புறஉலகைப் பற்றுவது இல்லை. நாசியின் நுகர்ச்சி உள்ளொடுங்கி விடுகிறது. சரங்கள் என்னும் சுவாசம் ஒரு குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் உள்ஒடுங்கிவிடுகிறது. நாவானது மோன நிலையிலே ஒன்றிவிடுகிறது. காம இச்சை அடங்கிவிடுவதால் எட்டாவது வாயிலும் அடைத்துவிடுகிறது. ஆதனவாயிலோ என்றால் கீழ்முகமாகச் செல்கின்ற அபானன், மேல் நாடியோடு சென்று ஒடுங்கிவிடுகிறது. ஆகவே ஐம்புலக்கதவும் அடைத்து ஒன்பது வாயில்களும் மூடிவிடுகின்றன. இந்த மாபெரும் சாதனையைச் செய்கிற கலை ஒப்பற்ற ஒரே மந்திரமான பிரணவத்தின் கலையாகும். இந்த ஓர் மந்திரக் கலையை அடுத்த வரிகள் மேலும் விளக்குகின்றன.

ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

இந்த அடிகளில் அங்குச நிலையும் என்பது, அங்கிசை நிலையும் என்று சிவயோகியார் போன்ற சில ஞானிகளின் பாடமாகக் காணப்படுகிறது.

ஆறு ஆதாரங்களில் உள்ள ஆற்றலை விளக்குகின்ற சித்தர்கள், மனித மனமானது மதம் கொண்ட யானையைப் போல் உலக இச்சைகளிலே திரியாதவாறு அதை நெறிபடுத்தும் அங்குசமாக விளங்குகிறது என்று கூறியிருக்கிறார்கள். அங்குசம் என்ற பாடத்தைக் கொண்டோமானால் ஆறு ஆதாரங்களின் ஆற்றல் எழுந்து செயற்படுகின்ற முறையைப் பரமகுரு விளக்குகிறான் என்று கொள்ள வேண்டும்.

அங்கிசை நிலையும் என்ற பாடத்தைக் கொண்டோமானால், அங்கு-இசை-நிலையும் என்று பிரித்து ஆறு ஆதாரங்களின் இயக்கத்தினால் எழுகின்ற இசை போன்ற இனிய ஒலியை இத்தொடர் குறிப்பதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

சிவயோகி இரத்தினசபாபதியார் போன்ற சில பெரியோர்கள் இப்பொருளையே கூறியுள்ளார்கள். அப்பொருளின் தொடர்பாகவே அடுத்த அடியில் வருகின்ற 'பேச்சு உரை அறுத்தே' என்னும் சொற்களுக்குப் பொருள் மொழிகிறார்கள்.

சகஸ்ரதளம் என்ற ஆயிரம் இதழ்த் தாமரை ஞானப் பயிற்சியின் மூலம் மலரும்போது, அதாவது ஆறு ஆதாரங்களிலே நடைபெறுகின்ற ஞானத் தொழிலின் விளைவாக இந்தத் தாமரையானது மலரும் பொழுது, அங்கே நாதம் உதிக்கிறது. சக்கரதளம் என்று அழைக்கப்பெறுகிற இந்தத் தாமரையிலே மனம் நிலைபெற்றால், பிரணவத்தின் ஆற்றலாகிய நாதமும் ஒரு முன்னேற்ற நிலையில் ஓய்ந்துவிடும். அதனைத்தான் சித்தர்கள் நாதாந்தம் என்று குறிப்பிடுகிறார்கள். அப்போது கண்கள் காணுவதில்லை. செவிகள் கேட்பதில்லை. ஞானப் பெருநெறியாகிய மோன ஒடுக்கத்தில் இந்த இயல்பைத் திருமூலர் தமது திருமந்திரத்திலே மிக அழகாகப் பாடுகிறார்:

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்
நாணாத நாணமும் நாதாந்த போதமும்
காணாய் எனவந்து காட்டினன் நந்தியே

என்று, தமது ஞானாசிரியனாகிய பரமகுரு நந்திதேவர் தமக்கு ஞானத்தை வழங்கிய நிலைபேறான பேரின்பக் கல்வியை, வியந்து பாடுகிறார்.

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி

சித்தர்கள் இலக்கியத்தில் உள்ள மந்திர இரகசியம் என்னவென்றால் இடைநாடி, பிங்கலைநாடி என்ற இரண்டு நாடிகளுக்கும் இரண்டு எழுத்துக்களே அதிர்வு நிலைகளாம். இடைநாடியின் அதிர்வுநிலை மொழியின் முதல் எழுத்தாகிய அகரம். பிங்கலையின் அதிர்வு நிலை உகரமாகும். ஞானம் பயில்கின்ற மாணவனுக்கு இந்த இரண்டு நாடிகளும் பேசத் தொடங்கும்போது அகரமும் உகரமும் அதிரத் தொடங்குகின்றன. இந்த இரண்டு அதிர்வுகளும் 'தொழிற்பட ஆரம்பித்ததும், தலையின் மண்டை ஓட்டிலே, அதன் நடுவிலே உள்ள ஒலி அதிர்வு தொடங்கி விடுகிறது. அந்த அதிர்வுநிலை மகரமாகும். இந்த மூன்று அதிர்வுகளும் சேர்ந்ததே அ, உ, ம ஆகிய மூன்று எழுத்துக்களும் இணைந்த பிரணவ ஒலியாகும். எனவேதான் இடைகலை, பிங்கலை இவற்றைக் காட்டி நடுவொலியாகிய மகரத்தைக் குருநாதன் காட்டுகிறான் என்று சொல்லப்படுகிறது. இந்த நடுஒலியின் பிறப்பிடமே சுழுமுனையாகும். இது இயங்குகின்ற உச்சிமுடிவே கபாலம் என்ற மண்டை ஓட்டின் நடுப்பகுதியாகும்.

மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலு ணர்த்தி

சுழுமுனையின் அதிர்வுநிலையைப் பிரம்மப்புழை என்று சித்தர்கள் அழைக்கிறார்கள். இது குருநாதனால் நேர்முகமாகக் காண்பிக்க வேண்டிய பேரறிவுத் தளமாகும். இதில் நினைவு முழுவதையும்